Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 7, 2021

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 07, 2022 | ஒளி: 08 கதிர்: 116 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## பால் தேநீர், தேநீர் விலை குறைப்பு

லிட்ரோ எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டதை அடுத்து, ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 100 ரூபாயாகவும் மற்றும் ஒரு கோப்பை தேநீரின் விலை 30 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், நேற்று (06) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை

# நிறைவேறியது

**அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட 20 நாடுகள் ஆதரவு**

**சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 7 நாடுகள் எதிர்ப்பு**

**இந்தியா, ஜப்பான், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட 20 நாடுகள் வாக்கெடுப்பை தவிர்த்தன**



இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பில் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால், ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று (6) நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

இலங்கையை

## குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்

**தன்னார்வ நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து**

ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜெனீவா சென்றுள்ள உறுப்பினர்கள் ஆகியோர் கூட்டாக இந்தக் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## துருவப்படுத்தும் முயற்சி

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் பிரித்தானியா தலைமையிலான இணையனுசரணை நாடுகளால், ஐ. நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணையானது இலங்கையில் வடக்கையும் தெற்கையும் துருவப்படுத்தும். இலங்கையின் இறையாண்மைக்கு முரணான இந்தப் பிரேரணையை நிராகரிப்பதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி பேரவையில் தெரிவித்தார்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள 51/L 1 பிரேரணையானது இலங்கையின் தேசிய அரசியலுக்கு முற்றிலும் பாதகமானதாகும். எனினும் இந்தப் பிரேரணையில், எமக்கு ஆதரவு வழங்கிய நாடுகளுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். அதுமட்டுமல்ல, இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு இந்த ஆணைக்குழுவில் தீர்வு வழங்கப்படவில்லை. அதற்கு முற்றிலும் விலகிச்சென்று செயற்படுவதாகவே வெளிப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.




## ஜெனீவா தீர்மானம் 'ஐ.எம்.எப்'யை குழப்பாது

■ ஆர்.யசி



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவருவதால், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் குழப்பமடையப்போவதில்லை. ஐ.எம்.எப் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மனித உரிமைகள் பேரவையுடன் இணைத்து செயற்படும் நிறுவனம் அல்ல.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிப்பு

பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு, பாராளுமன்ற வளாகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதலாவது பொப்பி மலர் நேற்று (06) பகல் அணிவிக்கப்பட்டது. இலங்கை முன்னாள் பாதுகாப்புப் படைவீரர்கள் சங்கத்தின் பொப்பி மலர் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய, ஜனாதிபதிக்கு முதலாவது பொப்பி மலரை அணிவித்தார். உலகப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக, இலங்கை முன்னாள் பாதுகாப்புப் படைவீரர்கள் சங்கம், வருடாந்தம் பொப்பி மலர் தினத்தை ஏற்பாடு செய்து வருகிறது. இதன் மூலம் திரட்டப்படும் நிதியானது, போரில் உயிரிழந்த வீரர்கள் மற்றும் அங்கவீனமுற்ற வீரர்களின் குடும்பங்களின் நலன்புரிக்காக செலவிடப்படுகிறது.

## போராடுவது இலகு; தீர்வு கடினமானது




■ பா.நிரோஸ்

நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு புத்தபெருமான் காட்டிய வழிமுறைகளையே தான் பின்பற்றுவதாக தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போராட்டங்களை மேற்கொள்வது இலகு; ஆனால், தீர்வு வழங்குவதே கடினம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நாட்டை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டேன்

**எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ**



நாட்டை துண்டாக்கும் எந்தவொரு பிரேரணைக்கும் தாம் உடன்படப்போவதில்லை. அத்தகைய பிரேரணை கொண்டுவரப்பட்டால், அதனை தோற்கடிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வாக்குறுதியளித்துள்ளதாக கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மைத்திரியின் மனுவை பரிசீலிக்க தீர்மானம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தனக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (06) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

உயர்தர பரீட்சையை பிற்போட

## கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தார் கம்மன்பில

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையை 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கும் மின் மனுவில் கையொப்பமிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எமது உயிருக்கு அச்சுறுத்தல்

■ பா.நிரோஸ்

என்னையும் சாணக்கியன் எம்.பியையும் பின்தொடர்ந்த கிழக்கு மாகாண பதிவிலக்கத்தை கொண்ட மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால், எமது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) வியாழக்கிழமை சிறப்புரிமை பிரச்சினைகளை முன்வைத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது சுமந்திரன் எம்.பி மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

## மினுவாங்கொடை முக்கொலை சந்தேகநபர்கள் மூவர் கைது

மினுவாங்கொட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரு மகன்களை, நேற்று (07) காலை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர், கலேவெல பிரதேசத்தில் நேற்று (07) மதியம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மொத்தக் கட்டண நிலுவையை செலுத்தாவிடின் மின்வெட்டு

எதிர்வரும் 15ஆம் திகதிக்குள், மொத்த மின் கட்டணமான 6 இலட்சத்து 37 ஆயிரத்து 448 ரூபாய் 38 சத நிலுவை மின் கட்டணத்தை செலுத்துமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகரவுக்கு இலங்கை மின்சார சபை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தொடர்ச்சி P2

22 ஐ விவாதிப்பதா, இல்லையா?

## ஒருவருக்கு ஒருவர் குற்றஞ்சாட்டி ஆளும் -எதிர்க்கட்சி வாக்குவாதம்

■ பா.நிரோஸ்

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டமூலத்தை ஆதரிப்பதாக காலையில் கூறிய பிரதான எதிர்க்கட்சி, மாலையில் எதிர்ப்பதாகக் கூறியதாக ஆளுந்தரப்பு குற்றம்சாட்டிய நிலையில், 22இல் உள்ள சில விடயங்கள் தொடர்பில் அரசு உத்தரவாதம் வழங்க மறுத்தமையாலேயே அதனை எதிர்க்க வேண்டியேற்பட்டதாக எதிர்க்கட்சி தெரிவித்ததால், 22 ஆவது திருத்தத்தை விவாதத்துக்கு எடுப்பதா, இல்லையா என்பது தொடர்பில் சபையில் கடும் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டதுடன் இறுதியில் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை விவாதத்துக்கு எடுக்காது அரசு வாபஸ் பெற்றுக்கொண்டது.

தொடர்ச்சி P2

ரூ.3,600 கோடி சம்பாதித்த விவகாரம்

## தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக சட்டநடவடிக்கை

**அறிக்கையை நிராகரிப்பதாகவும் சிபெட்கோ தெரிவிப்பு**



எரிபொருள் இறக்குமதி தொடர்பில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர, நேற்று முன்தினம் (05) வெளியிட்ட அறிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ), அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தது. கூட்டுத்தாபனத்தால் நேற்றையதினம் (06) வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பால் தேநீர், தேநீர் விலை குறைப்பு

அதற்கமைய, 50 ரூபாயாக இருந்த ஒரு கோப்பை தேநீரின் விலை 30 ரூபாயாகவும், 120 ரூபாவாக இருந்த ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 100 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பால் தேநீர் மற்றும் தேநீருக்கு கட்டுப்பாட்டு விலையை விதிக்குமாறு நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை விடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார். இவ்வாறான கட்டுப்பாட்டு விலையை விதிக்கப்பட்டால், மக்கள் அச்சமோ, சந்தேகமோ இன்றி எந்த ஹோட்டலிலும் தேநீர் அருந்தும் வாய்ப்பு கிடைக்கும் என்றார்.

லிட்ரோ நிறுவனம் எரிவாயு விலையை குறைப்பது நல்ல போக்கு என்றும் இந்த விலைக்குறைப்பை சாதகமாக பயன்படுத்தி வாடிக்கையாளர்களை கவர்வதற்கு ஹோட்டல் உரிமையாளர்கள் முயல வேண்டும் என்றும் குறிப்பிட்டார். கோதுமைமாவின் விலையை 250 ரூபாயால் குறைத்தால் கொத்து ரொட்டி, மரக்கறி ரொட்டி, ரோல்ஸ் போன்ற உணவுப் பண்டங்களில் விலைகளைக் குறைக்க தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

## குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று (06) இடம்பெற்ற இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் இடம்பெற்ற ஊடாடல் பொது நிகழ்வில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கையில் போருக்கு பின்னர் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டபோதும், அவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கவில்லை. அதுமட்டுமல்ல நல்லிணக்கம் குறித்து ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு பொறிமுறையும் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பிலும் தமிழர்களுக்கு நம்பிக்கையில்லை. அதேபோல் தமிழர் பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கிறது. எனவே, காணாமல் போதல் மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும்.

இதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் ஆதரவை வழங்கவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# நிறைவேறியது

இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள இந்த பிரேரணையில் இலங்கைக்கு ஆதரவாக குறைந்த வாக்குகளே கிடைக்கும் என இலங்கை உற்பட பல்வேறு தரப்பினர் முன்கூட்டியே தெரிவித்திருந்த நிலையில், நேற்றைய வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக, பிரேரணையை ஆதரித்து ஐக்கிய இராச்சியம் , அமெரிக்கா உள்ளிட்ட 20 நாடுகளின் வாக்குகள் பிரயோகிக்கப்பட்டன.

பிரேரணையை எதிர்த்து சீனா, பாகிஸ்தான், கியூபா, வெனிசுவேலா உள்ளிட்ட 7 நாடுகள் வாக்களித்தன. இந்தியா, ஜப்பான், ஐக்கிய அரபு இராச்சியம், இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், கத்தார், பிரேசில் உள்ளிட்ட 20 நாடுகள்வாக்கெடுப்பில் இருந்து விளகினர்.

ஐக்கிய இராச்சிய தூதுவர் சைமன் மேன்லி இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்கு கேட்டிருந்தார். பிரான்ஸ் தூதுவர் இதனை வழிமொழிந்து ஏனைய நாடுகளின் ஒத்துழைப்புக்களை வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையின் நீண்டகால வாக்குறுதி மீறல்கள், மனித உரிமை மீறல்கள், அண்மைக்கால போராட்டங்கள்,அரச அடக்குமுறைகள் மிக மோசமான நிலையில் காணப்படுவதாகவும் , ஆகவே இலங்கையின் உள்ளக பொறிமுறைகளை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் வலியுறுத்தி அவர்கள் முன்வைத்த பிரேரணையை நியாயப்படுத்தியிருந்தனர். எனினும் சீனாவும், பாகிஸ்தானும் இந்த பிரேரணையை எதிர்ப்பதாக தெரிவித்ததுடன் , இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் உரிமை குறித்தும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

'இலங்கையில் நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்க உணர்வைக் கண்டறிவதில், தமிழர்களுக்கான சமத்துவம் மற்றும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான கோரிக்கையை எப்போதும் மதித்து வருவதாக தெரிவித்த இந்தியா, தமிழர்களின் நியாயமான அபிலாஷையை அங்கிகரிக்குமாறு இலங்கையை வலியுறுத்துவதாக தெரிவித்தது.

இலங்கை அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே நிராகரித்த நிலையில், தற்போதைய புதிய பிரேரணையை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என அறிவித்திருந்தது .

இத்தீர்மானம் குறித்த ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல அறிக்கை அடுத்த ஆண்டு ஜுன் மாதமும், ஆரம்பகட்ட எழுத்துமூல அறிக்கை 2023 செப்டெம்பர் மாதமும், 2 ஆம் கட்ட வாய்மொழிமூல அறிக்கை 2024 மார்ச் மாதமும், முழுமையான இறுதி அறிக்கை 2024 செப்டெம்பர் மாதமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படும்.

## நாட்டை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டேன்

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (5) தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசாவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பின் போதே அவர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தின் அழைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில், அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம். எதிர்க்கட்சியின் சார்பில் அவசியமான யோசனைகளை முன்வைத்துள்ளதாகவும், ஒற்றையாட்சியை உறுதிப்படுத்துவதும், நாட்டை பிளவுபடாது ஒன்றுபட்ட நாடாக பாதுகாப்பது ஐக்கிய மக்கள் சக்தியின் தலையாய கடமை என்றார். அதன்படி, 13வது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் நாட்டை துண்டாக்கும் எந்தவொரு பிரேரணைக்கும் தாம் உடன்படப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற குழுநிலை விவாதத்தின் போது,அத்தகைய பிரேரணை கொண்டு வரப்பட்டால், அதனை தோற்கடிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று அவர் எமக்கு தெளிவான வாக்குறுதியை வழங்கினார். எனவே எதிர்க்கட்சி தலைவரின் வாக்குறுதியில் முழுது திருப்தி உள்ளதாகவும் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

## மைத்திரியின் மனுவை பரிசீலிக்க தீர்மானம்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இருவர் அடங்கிய அமர்வு, இந்த மனுவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பில், ஒக்டோபர் 14ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸ் உத்தரவை இரத்துச் செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி தனது மனுவில் கோரியுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஏற்கவியலாத சாட்சியங்கள் மற்றும் செவிவழிச் சாட்சியங்களை கருத்திற்கொண்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் நோட்டீஸ் பிறப்பித்துள்ளதாகவும் தனது விருப்புரிமை அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்த கோட்டை நீதவான் தவறிவிட்டார் என்றும் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு கோட்டை நீதவான் நோட்டீஸ் பிறப்பிக்கும் முன்னர், தனியார் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் சட்டத் தேவைகளை நீதித்துறைசார் ரீதியில் மதிப்பீடு செய்ய தவறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெனிவா தீர்மானம்

ஆகவே அவர்களின் பிரேரணை இலங்கையுடனான ஐ.எம்.எப் நகர்வுகளை பாதிக்காது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியினால் நேற்று (6) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

ஐ.எம்.எப் பணியாளர் குழுவுடன் செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. கடன் மறுசீரமைப்பு குறித்து இருதரப்பு கடன் வழங்குநர்கள், ஏனைய தரப்புடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விரைவில் முன்னேற்ற மட்டமொன்றை அடையவே முயற்சிக்கின்றோம். எனினும் சகல தரப்புடனும் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து சென்றாலும், முன்னேற்ற மட்டம் என்ன என்பதை வெளிப்படுத்துவது கடினமானதே. சகலரும் ஒரு நிலைப்பாட்டை எட்டிய பின்னரே இது குறித்த முன்னேற்றங்களை அறிவிக்க முடியும்.

அதேபோல் சர்வதேhச நாணய நிதியத்தின் மூலமாக கிடைக்கும் நிதியை விடவும், எமது வேலைத்திட்டங்கள் மற்றும் கடன் ஸ்திரத்தன்மை என்பவற்றை அடிப்படையாக கொண்டே நாம் கவனம் செலுத்துகின்றோம். இதன்போது பகுதி பகுதியாக நிதியும் கிடைக்கும். இதில் சாதகமான காணப்பட்டால் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலமாகவும் மேலதிக கடன் சலுகைகள் எமக்கு கிடைக்கும். அத்துடன், கடன் மறுசீரமைப்பு மூலம் கடன் வழங்கும் கால எல்லையை நீடித்தாலும்,கடன் வெட்டு சலுகைகளும் கிடைக்கும். இதன்மூலம் கடன் நெருக்கடியில் இருந்து விடுபட முடியும். குறுகிய மற்றும் நீண்டகால சலுகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் நாட்டின் பொருளாதாரத்தையும் மாற்றியமைக்க முடியும் என்றார்.

## போராடுவது இலகு: தீர்வு கடினமானது

எமது நாட்டின் நிதி மற்றும் பொருளாதார நிலைமைகள் தற்பொழுது சாதரண நிலையில் இல்லை. ஆனால் நாடு சாதாரண நிலையில் இருப்பதாகக் கருதியே சில அரசியல் கட்சிகளும் குழுக்களும் செயல்படுகின்றன. அந்த சிந்தனையுடனே அவர்கள் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைக்கின்றனர். அவ்வாறு சிந்தித்தே தீர்வுகளை முன்வைக்கின்றனர். எரிபொருள் வரிசை நிறைவடைந்து விட்டது என்பதற்காக எம்மால் அவ்வாறு சிந்திக்க முடியாது. அண்மைக்காலத்தில் எமது நாடு முகங்கொடுத்த பாரதூரமான பொருளாதார நெருக்கடி நிலைக்கே நாம் இன்று முகங்கொடுத்துள்ளோம்.

ஜப்பான்,இந்தியா மற்றும் சீனா போன்ற எமக்கு உதவி வழங்கும் பிரதான நாடுகளுடன் பொது உடன்பாட்டுக்கு வர எதிர்பார்க்கிறோம். கடன் வழங்கிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்களுடன் தற்பொழுது பேச்சு நடத்தி வருகிறோம். அனைவருடனும் பல்தரப்பு உடன்பாட்டை எட்டுவதற்கு எதிர்பார்க்கிறோம். எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் உடன்பாட்டுக்கு வந்த பின்னர் லண்டன் கிளப் போன்ற

## எமது உயிருக்கு அச்சுறுத்தல்

2022 ஆகஸ்ட் 6 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தொடர்பில் சிறப்புரிமை விடயத்தை எழுப்பியிருந்தேன். அது ஒழுக்க நெறி மற்றும் சிறப்புரிமை குழு தொடர்பானது. இதன்படி ஒக்டோபர் 4 ஆம் திகதி அது தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி நான் அங்கு சென்றிருந்தேன். 'பெற்றி டீவி' அழைக்கப்பட்டு சான்று பகிரப்பட்டிருந்தாக முகநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு அரசியல் கட்சியின் தலைவர், சிவனேசன்துரை சந்திரகாந்தன் குறித்த தவறான காட்சியை அனுப்பியுள்ளார். அதில் அவரின் குரலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தன் எவருக்கும் பிரயோசனமும் இல்லை. வெறுமனே ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான சான்றுகளின் பிரகாரம் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்பவரால் இது மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை ஒக்டோபர் 5 ஆம் திகதி சாணக்கியனும் நானும் நண்பகல் 12.45 மணியளவில் ஹோட்டன் பிளேசில் கூட்டமொன்றில் இரண்டு தனிப்பட்ட வாகனங்களில் சென்றோம். நாங்கள் பயணித்துக்கொண்டிருந்த போது பாதுகாப்பு தரப்பினர் எங்களை மோட்டார் சைக்கிளொன்று பின் தொடர்ந்து வந்தது என்று தெரிவித்து அதன் புகைப்படத்தை எடுத்துள்ளனர். கிழக்கு மாகாணத்தின் இலக்கத் தகடை கொண்ட வாகனமே வந்திருந்தது.

## ஒருவருக்கு...

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீண்ட விரிவான விசேட அறிப்பை விடுத்து பாராளுமன்றத்தில் நேற்று (06) உரையாற்றியிருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்த விசேட அறிவிப்பு தொடர்பில் ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே சபையில் விவாதத்தைக் கோரினார். இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதியின் விடேச அறிவிப்பு தொடர்பில் விவாதத்தை நடத்துவதற்கு ஆளுங்கட்சி இணங்குவதாகத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, விவாதத்துக்கு எதிர்க்கட்சியும் தயாராக இருக்கிறது. ஆனால் 22ஆவது திருத்தச் சட்டம் மீதான விவாதம் இன்று நடக்குமா? இல்லையா? என வினவினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஸ் குணவர்தன, 22ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளிப்பதாகக் கூறிய ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அந்நிலைப்பாட்டை தற்போது மாற்றிக்கொண்டுள்ளனர். இது

## மினுவாங்கொடை முக்கொலை சந்தேகநபர்கள் மூவர் கைது

கொலையை செய்துவிட்டு அநுராதபுர வழித்தடத்தில் பயணித்த பஸ்ஸில் தப்பிச் செல்லும் போதே இந்த மூவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மினுவாங்கொட கமகெதர பகுதியிலுள்ள வீடொன்றுக்கு மோட்டார் சைக்களி மற்றும் காரில் துப்பாக்கியுடன் வந்த குழுவினர், நேற்று காலை 7 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தந்தையும் இரண்டு மகன்களும் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். உயிரிழந்த 51 தந்ததை மற்றும் 23, 24 வயதுடைய மகன்மார் இருவர் உள்ளிட்ட மூவரின் சடலங்கள் மினுவாங்கொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மூன்று நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பட்டம் (காற்றாடி) தகறாறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாக தெரிவித்த அவர், தனிப்பட்ட தகறாறின் அடிப்படையிலும் இடம்பெற்றிருக்கலாம் என்றும் உயிரிழந்த மூவரும் சில மாதங்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## தயாசிறி ...

தயாசிறி எம்.பியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் பொய்யானதும், பொய்யானவை மற்றும் அடிப்படையற்றவை மற்றும் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன என்று கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள் இறக்குமதி செய்யும் போது, கூட்டுத்தாபனம் எப்போதும் விலைமனுக்கோரல் நடைமுறை மற்றும் அரசாங்க கொள்வனவு நடைமுறைகளையே பின்பற்றுவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் இறக்குமதி தொடர்பான எந்தவொரு விசாரணையிலும் அல்லது சட்ட நடவடிக்கைகளிலும் உண்மைகளை தெளிவுபடுத்த தயாராக இருப்பதாக கூட்டுத்தாபனம் அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் தரமற்ற எரிபொருளை இறக்குமதி செய்ததன் மூலம் அது தொடர்பான நிறுவனங்களின் முகவர்களும் அவர்களுடன் இணைந்து செயற்படும் அரசியல்வாதிகளும் 100 மில்லியன்

## கையெழுத்து வேட்டையை ஆரம்பித்தார் கம்மன்பில

உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட வேண்டும் என்று விரும்பும் இவ்வருடப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவ, மாணவியர் wudayagammanpila.com/petition ஊடாக இந்த மின்னஞ்சலில் கையொப்பமிட முடியும் என்று குறிப்பிட்டார். இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்விக் காலம் முழுவதும் கொரோனா தொற்று காரணமாக பாடசாலைகள் மற்றும் பயிற்றுவிப்பு வகுப்புகளை திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். துமட்டுமின்றி, வரலாற்றின் மிக நீண்ட ஆசிரியர் வேலைநிறுத்தம், மக்கள் எதிர்ப்புக்கள், ஊரடங்கு உத்தரவுகள், எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள், அடிக்கடி மின்வெட்டு, எரிபொருள் பற்றாக்குறையால் போக்குவரத்து தடை, பொருளாதார நெருக்கடி மற்றும் உள்நாட்டு அமைதியின்மை ஆகியவை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார். கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதற்கும் அடுத்த உயர்தரப் பரீட்சைக்கும் இடையில் சுமார் 280 நாட்கள் காணப்பட்டதாகவும் இம்முறை அந்த இம்முறை 98 நாட்களுக்கு மட்டுப்படுத்த ப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவை பரீட்சைக்குத் தயாராகி வருபவர்களும் பாடநெறிகளை மாற்றுபவர்களும், பரீட்சைக்கு தயாராகுவதற்கு போதிய அவகாசம் இல்லை என கோரிக்கை விடுத்துள்ள காரணத்தால், பரீட்சையை பிற்போட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## மொத்த கட்டண நிலுவையை செலுத்தாவிடின் மின்வெட்டு

கொழும்பு 7 இல் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் குறித்த நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு தயாசிறி எம்.பிக்கு குறித்த இல்லம் கையளிக்கப்பட்ட போது, வசிப்பிடத்தை கையளிக்கும் போது 4 இலட்சத்து 94 ஆயிரத்து 739 ரூபாய் 69 சதம் மின்கட்டணம் நிலுவையில் இருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 இலட்சத்து 32 ஆயிரத்து 188 ரூபாய் 07 சதம் கட்டணம் செலுத்தப்பட்ட போதும், 6 இலட்சத்து 37 ஆயிரத்து 448 ரூபாய் 38 சத நிலுவை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் கட்டணம் செலுத்தப்படாவிடின், மேலதிக அறிவித்தல் இன்றி மின்சாரம் துண்டிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, கட்டணத்தை செலுத்துமாறு தயாசிறி எம்.பிக்கு மின்சார சபை அறிவித்துள்ளது.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# கோப் தலைவராக பேராசிரியர் ரஞ்சித் பண்டார



அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப்) தலைவராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோப் குழுவின் தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நேற்று (06) நடைபெற்ற போது 14 வாக்குகளை பெற்று குழுவின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்ற கட்டடத் தொகுதியின் கோப் குழு கூடிய போது, குழுவின் தலைவரை தெரிவு செய்வதற்கான பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன. இவ்வேளையில் ஆளும் கட்சி சார்பில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் பெயரும், எதிர்க்கட்சி சார்பில் எரான் விக்கிரமரட்ணவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், அது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் பேராசிரியர் ரஞ்சித் பண்டார 14 வாக்குகளையும், எரான் விக்கிரமரட்ண 7 வாக்குகளையும் பெற்றனர். இதற்கமைய கோப் குழுவின் தலைவராக ரஞ்சித் பண்டார தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோப் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சியினருக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் கோரிக்கைகளை விடுத்து வந்த போதும், ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரே அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா பிரேரணையால்

# இலங்கைக்கு பாதிப்பு ஏற்படும்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கடுமையான பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இப்பிரேரணையால் இலங்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையில் முன்மொழியப்பட்ட பிரதான 19 யோசனைகளில் 6 யோசனைகள் இலங்கையில் நடைபெறும் ஊழல் தொடர்பானவை.

பாரியளவான ஊழல் மோசடிகளும், நிதியை தவறாகப் பயன்படுத்துவதுமே இலங்கையுடனான வேலைத் திட்டங்களில் பெரும் தடையாக உள்ளதாக அமெரிக்காவின் செனட் சபையில் கொண்டுவரப்பட்ட யோசனைகளில் குறிப்பிடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான ஊழல்களை வைத்துக்கொண்டு ஜனாதிபதியின் வேலைத்திட்டம் வெற்றியடையாது எனவும், ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் பிரேரணையால் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள பல விடயங்களை நாம் எதிர்க்கிறோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுசீரமைக்கும் வரையில் அச்சட்டத்தைப் பயன்படுத்தப்போவதில்லை என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தபோது நான் சர்வதேசத்துக்கு வாக்குறுதியை வழங்கியிருந்தேன். எனினும், இந்த வாக்குறுதியை இலங்கை மீறியுள்ளதோடு, பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பில்லாதவர்களுக்கு எதிராகக் கூட பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டில் பயன்படுத்தப்படுகிறது எனவும் தெரிவித்தார்.



ஐ.எம்.எப் ஊழல் எதிர்ப்பு விதிகளுக்கமைய

# புதிய சட்டமொன்று கொண்டுவரப்படும்

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழல் எதிர்ப்பு விதிகளுக்கமைய நீதி அமைச்சர் அது தொடர்பான புதிய சட்டமொன்றை கொண்டுவர நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று, ஜனாதிபதியின் விசேட உரையின் பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுமந்திரன் எம்.பி ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பி கூறுகையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டக் குழுவினருடனான பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில், இங்கே ஊழல் ஒரு சவாலாக இருந்ததாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் ஊழலை தோற்கடிப்பதற்கு அரசாங்கத்திடம் இருக்கும் திட்டமென்ன? அத்துடன் தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த போது சபைக்கு பேச்சுவார்த்தைகள் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்படும் என்று கூறியிருந்தார். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாள் குழுவினரின் கலந்துரையாடலின் பின்னர், ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளில் என்ன கூறப்பட்டுள்ளது என்ற தகவல்கள் வெளியாகவில்லை. இதனை பாராளுமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.

இதன்போது பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் ஊழல் எதிர்ப்பு விதிகள் தொடர்பாக நீதி அமைச்சர் ஊழல் ஒழிப்பு சட்டத்தை கொண்டுவருவார். அது தொடர்பில் அறிவிக்கப்படும். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்கள் நடக்கின்றன. சபையினால் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதில் நாங்கள் பிரதான தலைவரை சந்திக்கவுள்ளோம். இதேவேளை எதிர்வரும் வாரங்களில் நடக்கும் அமைச்சரவையில் இது தொடர்பில் கலந்துரையாடப்படும். அது தொடர்பான விளக்கத்தை அமைச்சர்கள் உத்தியோகபூர்வமாக வழங்குவர் என்றார்.

‘வட்ஸ்அப்’ விவகாரம்:

# குற்றப்புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளருக்கு அழைப்பு

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் ‘வட்ஸ்அப்’ அழைப்புகள் குறித்த தகவல்களை சட்ட அனுமதி இன்றி பெற்றுக் கொண்டமை குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் எதிர்வரும் 18ஆம் திகதி சிறப்புரிமை பற்றிய குழு முன்னிலையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பட்டாலி சம்பிக்க ரணவக்கவின் ‘வட்ஸ்அப்’ அழைப்புகள் தொடர்பான தகவல்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவால் சட்ட அனுமதியின்றி பெற்றுக் கொண்டமையால் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டிருப்பதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க அமைச்சராக இருந்தபோது, அந்த அமைச்சில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையுடன் தொடர்புபட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்தத் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருப்பதாக இங்கு புலப்பட்டது. இது தொடர்பில் மேலும் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரை எதிர்வரும் 18ஆம் திகதி குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறும் தெரிவிக்கப்பட்டது.

# அமைச்சர்களுக்கான இல்லத்தை நாமல் பயன்படுத்துகிறார்



பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் அமைச்சுப் பதவிகளில் இல்லாதபோதும், அமைச்சர்களுக்கான இல்லங்களைப் பயன்படுத்துவாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி குற்றஞ்சுமத்தினார்.

அமைச்சராக இருந்தபோது வழங்கப்பட்ட இல்லத்தை மீள ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இல்லமொன்றை தான் பெற்றுக்கொண்டதன் பின்னர், இந்த இல்லத்திலிருந்து செல்கிறேன் என நான் அறிவித்திருக்கிறேன். எவ்வாறாயினும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எந்தவோர் அமைச்சுப் பதவிகளையும் தற்போது வகிக்காத நிலையிலும், அமைச்சர்களுக்கான இல்லத்திலேயே அவர் தற்போதும் இருக்கிறார். அதுபோல பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கான இல்லங்களில் இருப்பதாகவும் தெரிவித்தார். தற்போது நான் வசித்து வரும் இல்லத்தின் மின்சாரக் கட்டணம் தொடர்பில் போலியான செய்திகளை வெளியிட்ட அனைவரையும் சிறப்புரிமை குழுவுக்கு அழைக்க வேண்டும் எனவும் தயாசிறி கூறினார்.

# நெதர்லாந்து தூதுவர் சபாநாயகரை சந்தித்தார்



இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனீ ஹோர்பக், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் (05) பாராளுமன்றத்தில் சந்தித்திருந்தார்.

நெதர்லாந்தின் அருங்காட்சியகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பெறுமதிமிக்க உள்நாட்டு தொல்பொருட்களை நல்லெண்ண அடையாளமாக இலங்கைக்கு திருப்பி வழங்கும் நோக்கத்தை தூதுவர் இதன்போது தெரிவித்தார். இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத்துறை அபிவிருத்தி வாய்ப்புகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

# பாராளுமன்றில் பெரும்பாலானோர் ஊழல் மோசடிக்காரர்கள்

அரசியலமைப்பு திருத்தத்தால் அரசியல்வாதிகள் பயன்பெறுகின்றார்களே தவிர நாடு முன்னேறவில்லை. நாட்டில் அரசியலமைப்பு பிரச்சினையில்லை; ஊழல் அரசியல்வாதிகளே பிரதான பிரச்சினையாக உள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார். பாராளுமன்றில் பெரும்பாலானோர் ஊழல் மோசடியுடன் தொடர்புப்பட்டுள்ளார்கள். ஊழல் அரசியல்வாதிகளை விரட்டியடிக்க நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச்சட்ட மூல வரைபு மீதான விவாதம் இன்று (நேற்று) இடம்பெறும் என குறிப்பிடப்பட்ட போதும் அது இடம்பெறவில்லை. மாறாக கவனத்தை திசைத்திருப்பும் வகையில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகை தந்து உரையாற்றி சென்றுள்ளார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்த உருவாக்கத்தை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் பிற்போடுகிறது. ஆகவே அரசியலமைப்பு திருத்தம் வெறும் பகல் கனவாகவே உள்ளது. ஆட்சிக்கு வரும் ஒவ்வோர் அரசாங்கங்களும் தமக்கு ஏற்றால்போல் அரசியலமைப்பை திருத்தம் செய்து கொள்கின்றன. ஜனாதிபதியின் அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு வழங்குவதாலும்,பாராளுமன்றத்தின் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதாலும் நாட்டு மக்கள் பயன்பெறவில்லை.காலம் காலமாக அரசியலமைப்பு திருத்தம் செய்யப்படுகிறது. ஆனால், நாடு ஒரே இடத்தில் உள்ளது.



நாட்டு மக்களின் பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்துவதை காட்டிலும் பாராளுமன்றில் அமைச்சர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஊழல் அரசியல்வாதிகளை நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து விரட்டியடிக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டும் என ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். புனர்வாழ்வு வழங்க வேண்டுமாயின் முதலில் பாராளுமன்றில் உள்ள அரச நிதி மோசடியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

போராட்டத்தில் ஈடுப்பட்ட இளைஞர்களுக்கு எதிரான அடக்குமுறையை அரசாங்கம் நிறுத்த வேண்டும். இல்லாவிடின் என்றாவது அதற்கு பதிலளிக்க வேண்டும் என்றார்.

# போராட்டங்களுக்கான சட்டங்கள் மீறப்படுகின்றன



போதைப்பொருளோடு நாட்டுக்குள் துப்பாக்கிகளும் கொண்டுவரப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவின் வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள கோஷ்டியினரும் ஒன்றாகவே இயங்குகின்றனர். நாட்டுக்குள் போதைப்பொருட்கள் கொண்டுவரும் வழியிலேயே துப்பாக்கிகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த மூன்று மாதங்களில் ஏற்பட்டுள்ள கொலைச் சம்பவங்கள் தொடர்பான முழு அறிக்கையும் சமர்ப்பிக்க தயார் எனவும் தெரிவித்தார்.

வெருகல் பிரதேச சபையின்

# மக்களுக்கான மக்களின் வரவு-செலவு திட்டம்



■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

பிரதேச மக்களது திட்ட முன்மொழிவுகளை உள்வாங்கி, வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் கருத்தரங்கு வெருகல் பிரதேச சபையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ள பௌதீக, மனித வளங்களை வினைதிறனாகவும் செயற்றிறனாகவும் பயன்படுத்தி, பிரதேச மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு, மக்களும் பிரதேச சபை நிர்வாகமும் இணைந்து பங்குபற்றிய செயலமர்வு, வெருகல் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று (06) நடைபெற்றது.

ஆசிய மன்றத்தின் நிதி அனுசரைணயில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் பொன். சற்சிவானந்தம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இணைப்பாளர் சற்சிவானந்தம், "பின்தங்கிய கிராமப் பிரதேசங்களில் பணியாற்றுகின்ற அரச மற்றும் அரசு சாரா நிறுவனப் பணியாளர்களுக்கும் வலுவூட்டல் தேவைப்படுகின்றது. அதிலோர் அம்சமாகத்தான் பிரதேச சபை நிர்வாகத்தினருக்கும் மக்களுக்குமிடையில் மக்கள் பங்கேற்புடனான வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

மக்கள் சேர்ந்து பணியாற்றுகின்ற கட்டமைப்புகளில் மிக முக்கியமானது உள்ளூராட்சி மன்றங்கள். எனவேதான், உள்ளூராட்சி மன்றங்களையும் இணைத்ததாக, மக்கள் பங்குபற்றுதலோடு வரவு செலவுத் திட்டத் தயாரிப்புத் தெளிவுபடுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன. இது, பிரதேச வளங்களைப் பயன்படுத்தி, மக்கள் அதி உச்சப் பயனைப் பெறும் முயற்சியாகும். எதிர்காலத்தில் எந்தவொரு செயற்றிட்டமும் மக்கள் பங்களிப்புடன் இடம்பெறும்போது, அது வெற்றியளித்து நீடித்து நிலைக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

செயலமர்வின் இறுதியில், மக்கள் பங்கேற்புடனான வரவு - செலவுத் திட்டம், பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, சுகாதார, பொது வசதிகள், நலன்புரி சேவைகள் உள்ளிட்டவற்றில் முன்னுரிமை அடிப்படையில், தேவைகள் அடையாளம் காணப்பட்டு, பிரதேச மக்களால் வெருகல் பிரதேச சபை தவிசாளர் உட்பட நிர்வாகத்தினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நிகழ்வில், வெருகல் பிரதேச சபையின் தவிசாளர் தேவராசா விஜயரகுவரன், பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம். தவமுரளீதரன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் கிராம அலுவலர்கள், பிரதேச சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், கலந்து கலந்து கொண்டனர்.

மோட்டார் சைக்கிள் விபத்தால்

## இரண்டு நாள்களில் ஆறு பேர் படுகாயம்

■ எம்.எஸ். எம் நூர்தீன்

காத்தான்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை (04), புதன்கிழமை ஆகிய இரண்டு தினங்களிலும் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் ஐந்து இளைஞர்கள் உட்பட ஒரு முதியவர் அடங்கலாக ஆறு பேர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காத்தான்குடி கடற்கரை வீதியிலும் புதன்கிழமை மாலை கர்பலா வீதியிலும் இந்த விபத்துச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. குறித்த இளைஞர்கள், மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்தியமையாலேயே இந்த விபத்துச் சம்பங்கள் இடம் பெற்றுள்ளன.

## 'ஔிரும் கல்முனை' வேலைத்திட்டம்

■ நூருல் ஹுதா உமர்



பல மாதங்களாகவும் ஒளிராமல் இருக்கும் தெரு மின்விளக்குகளை, மீள ஒளிரச்செய்யும் நடவடிக்கையை கல்முனைன மாநகர சபை உறுப்பினர் சமட் ஹமீட் 'ஒளிரும் கல்முனை' எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக மேற்கொண்டு வருகின்றார்.

தேசிய காங்கிரஸின் இளைஞர் அமைப்பாளரும், அல்- மீஸான் பௌண்டஷன் இணைப்பாளருமான சமட் ஹமீட் வட்டாரம், இனம், மதம், பிரதேசம் என்ற பாகுபாடுகளின்றி கல்முனை மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உதவியுடன் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். இதன்மூலம் பல சட்டவிரோத செயற்பாடுகள் குறைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வேலைத்திட்டம் கடந்த பல மாதங்களாக மருதமுனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை போன்ற பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








### வாணி விழாவும் ஏடு தொடக்கமும்...

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி இறுதிநாள் விழாவும், ஏடு தொடங்கி வைக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (05) மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் ச. நேசராஜா கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது, இரட்ணம் சஞ்சு சியாமலி சகோதரிகளின் வீணை இசையும், திருகோணமலை ஆனந்த பிரகதீஸ்வரா கலாலய மாணவர்களின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

பைஷல் இஸ்மாயில்

## கல்வி உயரதிகாரி முஹம்மட் தம்பி காலமானார்

■ வி.ரி சகாதேவராஜா



நிந்தவூரைச் சேர்ந்த இலங்கை கல்வி நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிகாரி அல்ஹாஜ் கே முஹம்மட் தம்பி, தனது 72 ஆவது வயதில் நேற்று (06) கொழும்பில் காலமானார்.

அன்னார், உதவி கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி), பிரதேச கல்விப்பணிப்பாளர் (அட்டாளைச்சேனை), பிரதி கல்விப்பணிப்பாள (கல்முனை), அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி (பீடாதிபதி), மேலதிக கல்விச்செயலாளர், ஆசிரியர் கல்வி ஆணையாளர் என கல்வித் துறையில் பல பதவிகளை வகித்திருந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், இறுதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழு உறுப்பினராக சேவையாற்றியிருந்தார்.

அன்னாரது ஜனாஸா நாளை வெள்ளிக்கிழமை காலை நிந்தவூரில் அடக்கம் செய்யப்படும் என உறவினர்கள் தெரிவித்தனர்.



மாந்தை கிழக்கில் கடமை, கண்ணியம் தவறும் அரச அதிகாரிகள்:

# சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணை

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில், அண்மைக் காலமாக காடழிப்பு, மண் அகழ்வுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்த, பிரதேச செயலகமும் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸாரும் தவறி நிற்பதுடன் மறைமுக அனுமதிகளை வழங்குகின்றனர் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, 'மாந்தை கிழக்கின் மாபியாக்கள்' என மக்களால் சட்டவிரோத செயற்பாடுகளினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நபர்களை, பொலிஸார் பாதுகாப்பதுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரும் குடியேற்ற உத்தியோகத்தரும் சட்டவிரோத காடழிப்புக்கு உதவிகளை செய்து வருகின்றனர் என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை குறித்த நபர்களால், தங்கள் மீது வெளிப்படையான குற்றச்சாட்டை முன்வைக்கும் மக்கள் மீது, இரவு நேரங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதும், இதுகுறித்து பாதிக்கப்பட்ட நபர்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டால், பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலைமையும் தொடர்வதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கரும்புள்ளியான் பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு அண்மையில் உள்ள அரச காணியை, வறுமை கோட்டுக்கு உட்பட்ட, பெண்தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பெண் பிள்ளைகளின் தாயார், 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தே பயன்படுத்தி வந்துள்ளார். ஆனால், இவரிடமிருந்து குறித்த காணி பறிக்கப்பட்டு, குடியேற்ற உத்தியோகத்தரால் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் நபர்களுக்கு, பிரதேச செயலாளரின் அனுமதியுடன் வழங்கப்பட்டு இருக்கின்றது. எந்தவொரு காணி பயன்பாட்டு குழு கூட்டத்திலும், மேற்குறித்த காணிக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படாமலேயே, இவ்வாறு சட்டத்துக்கு மாறாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் காணி பயன்பாட்டு குழுவின் கடந்த கூட்டத்தில் அனுமதிக்காக கோரப்பட்டிருந்தது. ஆனால், அனுமதி இல்லாமலே அவர்கள் பயிர்செய்கை நடவடிக்கையில் நீண்ட காலமாக செய்கின்றார்கள் எனவும் தெரிவித்த மக்கள், எங்கள் உறுதி காணிகளில் துப்புரவு செய்வதாயின் ஓட்டிவந்து அனுமதி கேட்கும் குடியேற்ற உத்தியோகத்தர், சட்டவிரோதமாக காடழித்து, காணி பிடிக்கும் போது அமைதியாக இருப்பதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கரும்புள்ளியான் பகுதியில் கழிவாற்றை மறித்து, ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஐந்து ஏக்கருக்கும் மேற்பட்ட அரச காணி அத்துமீறிய பிடிப்பு நடவடிக்கைக்காக, கிராம அலுவலரால் இரண்டு தடவைகளாக ஒட்டப்பட்டிருந்த 'வெளியேற்றல் நடவடிக்கை பத்திரம்' அத்துமீறிய நபர்களால் கிழிக்கப்பட்டு, அந்தக் காணிக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என குறித்த பகுதியைச் சேர்ந்த கிராம அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில், பிரதேச மட்ட அமைப்புகள் பிரதேச செயலகத்தில் முறையிட்டால், குறிப்பிட்ட நேரத்துக்குள் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து மிரட்டும் தொனியில் தொலைபேசி அழைப்பு வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.




### யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36ஆவது, பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, நேற்று (06) ஆரம்பமாகியுள்ளது. நாளை சனிக்கிழமை வரை தொடர்ந்து, மூன்று நாள்கள் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழாவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும் தங்கப் பதக்கங்களையும் வழங்குவார்.

எம். றொசாந்த்

ஐ. நா மனித உரிமைகள் பேரவையின்

# தீர்மானத்தை நிராகரிக்கின்றோம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

■ நிதர்சன் வினோத்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான தீர்மானத்தை நிராகரிக்கின்றோம் என, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேய இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை முற்றாக நிராகரிக்கிறோம். ஏனெனில் இத் தீர்மானமானது, தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால், தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் ஊக்குவிக்கும் விதமாகவே அமைந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள் பற்றிய எந்த புரிதலையும் இந்தத் தீர்மானம் வெளிப்படுத்தவில்லை. தமது குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லை; தாம் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டோம் என உணரும், தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீ லங்கா அரச படையினர், எதிர்காலத்திலும் தமிழர்களுக்கு எதிராக அட்டூழியங்களைத் தயக்கமின்றி மேற்கொள்வதற்கு, இத்தீர்மானம் வழி ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீ லங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ICC) பாரப்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த பரிந்துரையை இந்தத் தீர்மானம் முற்றிலும் புறக்கணித்துள்ளது. இதே பரிந்துரையை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அனைத்து முன்னாள் ஆணையாளர்களும் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களும் ஐ.நா நிபுணர்கள் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தி உள்ளனர். இதேகோரிக்கையை, நாம் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகம் உட்பட அனைத்து தமிழ் மக்கள் தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானம் எங்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் முற்றிலும் புறக்கணித்துள்ளது. ஆகவே இந்த நியாயமற்ற தீர்மானத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அதிகரிக்கும் எயிட்ஸ் நோயாளர்கள்

### எல்லயில் 25 பேர் அடையாளம்

எம். செல்வராஜா

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் பதுளை மாவட்டத்தில், இதுவரைக்கும் எயிட்ஸ் நோயாளர்கள் 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் எல்ல பகுதியில் மாத்திரம் 25 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பதுளை மாவட்ட வைத்தியசாலையின் பாலியல் நோய்கள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது அடையாளம் காணப்படும் எயிட்ஸ் நோயாளர்களுக்கு வெலிசர கொரோனா சிகிச்சை மையத்தில் சிகிச்சை அளிக்கப்படுவதாக பதுளை மாவட்ட வைத்தியசாலையின் பாலியல் நோய்கள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 3,500 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களில் 77 சிறுவர்களும்அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.








## மாவட்ட செயலகத்தில் நவராத்திரி

மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபோட மற்றும் பதில் அரசாங்க அதிபர் சுஜிவ போதிமான ஆகியோரின் தலைமையில், நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நவராத்திரி பூஜை நடைபெற்றது.

(டி. சந்ரு)





## செயலமர்வு

'விஷ்ணு ரோஹணம்' மன்றத்தினரின் ஏற்பாட்டில் நுவரெலியா நகரிலுள்ள பாடசாலைகளில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான செயலமர்வு, நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

(எஸ்.கே குமார்)







## விஜயதசமி பூஜை

இலங்கை வங்கியின் நுவரெலியா கிளையின் விஜயதசமி பூஜை நிகழ்வுகள், முகாமையாளர் எம். ராமன் தலைமையில் நடைபெற்றது.

(பி. கேதீஸ்)

### கொட்டகலையில்

## லொறி விபத்து; ஒருவர் பலி

எஸ்.கணேசன்



கொட்டகலை, திம்புள்ளை பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராவணகொட, விஜயபாகுகந்த, மெதகம்மெத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (05) இரவு லொறியொன்று வீதியில் கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக திம்புள்ளை பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராவண கொட, விஜயபாகுகந்த, மெதகம்மெத்த பிரதேசத்தில் வசிப்பவர் என்றும் இவர், ஹட்டன் டிப்போவில் நடத்துநராக கடமையாற்றும் 48 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹட்டனில் இருந்து மெதகம்மெத்த பிரதேசத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக மணல் மற்றும் கூரைத் தகடுகளை ஏற்றிச் சென்ற லொறியின் வேகத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியில் பின்நோக்கிச் சென்ற நிலையில், வீதியின் குறுக்கே குடைசாய்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நடத்துநர் பணி முடிந்து வீடு திரும்புவதற்காக லொறியின் பின்பகுதியில் பயணித்த போது இந்த விபத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

விபத்தில் லொறியின் சாரதியும் உதவியாளரும் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் சிகிச்சைக்காக மல்தெனிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மலசலகூட உபகரணங்களை திருடிய நால்வர் கைது

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலங்கண்டி பிரதேசத்திலுள்ள மண்டபம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மலசலகூட உபகரணங்களை திருடிய சம்பவம் தொடர்பில் நால்வர் ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த 1,25,000 ரூபாய் பெறுமதியான மலசலகூட உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### எரிபொருள் முறைகேடால்

## எரிபொருள் நிலையத்துக்குப் பூட்டு

எம். செல்வராஜா

வெல்லவாய நகரில் உள்ள ஐ. ஓ. சி எரிபொருள் நிரப்பு நிலையம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

அந்த நிலயைம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைகேடுகள் காரணமாக, அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் சீல் வைக்கப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை என்பன இணைந்து மேற்கொண்ட சோதனையின் பின்னர், குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



### மினிப்பே நீர்ப்பாசன திட்டத்திலிருந்து

## முதற்கட்ட நீர் விநியோகம்

ஷேன் செனவிரத்ன

15,000 விவசாயக் குடும்பங்கள் பயனடையும் வகையில், கண்டி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய நீர்ப்பாசன திட்டமான மினிப்பே திட்டத்திலிருந்து முதலாவது நீர் விநியோகம் இந்த மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன், மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன ஆகியோரின் தலைமையில் வில்கமுவ கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் நிதி உதவியில் 2,600 மில்லியன் ரூபாய் நிதி செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டமானது, மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### மலையக மரக்கறி, பழங்கள்

## ரயில் மூலம் கொழும்புக்கு

பி.கேதீஸ்

நுவரெலியா பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள், பழங்கள், பூக்களை நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து கொழும்புக்கு ரயிலில் கொண்டு செல்லும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, நுவரெலியா மேயர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் பொருளாதார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் கொழும்புக்கு மரக்கறிளை ரயிலில் கொண்டு செல்வது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

அதற்கிணங்க நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் சுஜீவ போதிமான்ன, நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி, நானுஓயா ரயில் நிலைய அதிபர், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கஜமுத்துடன் ஒருவர் கைது

மஹேஸ் கீர்த்திரத்ன

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகம் பெறுமதியுடைய கஜமுத்து ஒன்றை விற்பதற்காக, மாத்தளை பிரதேசத்துக்கு கொண்டு வந்த நபர் ஒருவர் மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபருடன் பொலிஸ் அதிகாரிகள் ஒரு வார காலமாக கொடுக்கல், வாங்கல் தொடர்பாக கலந்துரையாடி வந்த நிலையில், இறுதியில் விலை தீர்மானிக்கப்பட்டு கஜமுத்தை சந்தேகநபர் கொண்டு வந்த போதே, நேற்று (06) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அங்குணகொலபெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவித்துள்ள பொலிஸார், மாத்தளை நீதவான் நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

## ஒரே நேரத்தில் இரண்டு கோவில்களில் திருட்டு

ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவை, டலோஸ் தோட்ட முருகன் கோவில், எனிக் கீழ் பிரிவு மாரியம்மன் கோவில் என்பன உடைக்கப்பட்டு நகைகள், உண்டியலில் இருந்த பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் உடப்புஸ்ஸலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை உடப்புஸ்ஸலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவருக்கு

## 10 வருடங்களின் பின்னர் தண்டனை

மஹேஸ் கீர்த்தரத்ன

மாத்தளை, தம்புளை வெவல பிரதேசத்தில் 2008ஆம் ஆண்டு 16 வயது மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்ட நபருக்கு 10 வருட சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருமணமான 74 வயதுடைய நபர் ஒருவருக்கே மாத்தளை மேல்நீதிமன்ற நீதிபதி ரொஹான் ஜயவர்தனவால், நேற்றுமுன்தினம் (5) இவ்வாறு சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5,000 ரூபாய் அபராதமும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 1,50,000 ரூபாய் நட்டஈடும் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குற்றவாளி சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்து, கத்தியைக் காட்டி அச்சுறுத்தி துஷ்பிரயோகம்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

# புதிய வரி சமூகத்துக்கானதா அல்லது அரசாங்கத்துக்கானதா?

சமூகப் பாதுகாப்பு வரி அறவீடு ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ள நிலையில், அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்ததைப் போல, கடந்த ஒரு வருட காலமாக அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல், பொது மக்கள் திணறி வரும் நிலையில், மீண்டும் ஒரு வரிவிதிப்பினூடாக, வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை, மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும், குறித்த வரிக்கு 'சமூகப் பாதுகாப்பு வரி' எனப் பெயரிடப்பட்டுள்ளமையானது, குறித்த வரியை ஏளனம் செய்வதாக அமைந்துள்ளது.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்து, சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர், சமூகத்தில் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் எழுந்திருந்தது.

ஆனாலும், இந்தத் தாக்குதல் பற்றிய விசாரணைகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையிலும், சம்பந்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சுதந்திரமாகத் திரிகின்ற நிலையிலும், சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதில், மாதாந்தம் சம்பளம் பெறும் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளதை காண முடிகின்றது.

மக்களின் வரிப்பணத்திலிருந்து அந்த அரச படைகளுக்கு சம்பளம் செலுத்தப்படுவதுடன், வருடாந்த பாதீட்டில் உயர்ந்த தொகை இதற்காகவே தொடர்ந்தும் ஒதுக்கப்படுவதை காண முடிகின்றது.

நாட்டில் மக்கள் புரட்சி இடம்பெற்ற காலப்பகுதியிலும், அரச படைகளாக இந்தப் பாதுகாப்பு தரப்பினர் அரச தலைமைகளை பாதுகாக்கும் பணிகளை முன்னெடுத்ததையும், பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தில் மக்கள் உயிர்களுக்கும் சேதம் விளைவித்திருந்தமைக்கு கடந்த காலங்களில் 2013 ஆம் ஆண்டு ரத்துபஸ்வெல சம்பவம், 2022 ரம்புக்கன சம்பவம் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

இவ்வாறிருக்கையில், சமூகப் பாதுகாப்பு எனத் தெரிவித்து, உற்பத்திப் பகுதியிலிருந்து, அது இறுதியாக வாடிக்கையாளரை சென்றடையும் வரை, வரி அறவிடுவதன் மூலம் வெளியே 2.5 சதவீதமாக மாத்திரமே காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த வரி விதிப்பனவால், பொருட்களின் மற்றும் சேவைகளின் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பத்தில் ஆறு குடும்பம், தமது நாளாந்த உணவு வேளைகளில் ஒன்றைத் தவிர்த்து வருவதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு வரிச் சுமைகளை பொது மக்கள் மீது சுமத்துவது ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது. அதுவும், எந்தவிதமான வருமான அதிகரிப்புகளும், மேலதிக கொடுப்பனவுகளும் இல்லாத நிலைமைகளில், இவ்வாறு பொதுமக்களை மேலும்மேலும் இறுக்குவது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளாகும்.

குறிப்பாக, கடந்த அரசாங்கத்தால் முறையற்ற விதத்தில், வரி முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அரசாங்கத்துக்கான வருமானம் வீழ்ச்சியடைந்து, வங்குரோத்து நிலையை எய்தியிருந்த போதிலும், சம்பந்தப்பட்ட தீர்மானங்களை மேற்கொண்டவர்களுக்கு எதிராக இதுவரையில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் கடும் விசனத்துக்குள்ளாகியுள்ளது.

எனவே, இந்தப் புதிய வரி சமூகத்துக்கானதா, அரசாங்கத்துக்கானதா எனும் கேள்வியும் எழுந்துள்ளது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நமது நாட்டின் அரசியல் நியதி விசித்திரமானதும் அடிக்கடி மாறும் இயல்பும் உடையது. எந்த நேரத்தில் எந்தக் கட்சிக்கு மாறுவார்கள் என்பதை மாறும் அரசியல்வாதிகளே அறிய மாட்டார்கள். ஏன் இப்படி நடக்கிறது?

அரசியல்வாதிகளில் பலர், பொது நலத்தை விடுத்து, சுயநலத்துக்கே முன்னுரிமைக் கொடுக்கிறார்கள். சுயநலத்துக்காகக் கட்சிமாறி விட்டு, முன்னர் இணைந்திருந்த கட்சியைத் திட்டுவார்கள்.

இந்த நிலைமையும் நீடிக்காது; அடுத்த கட்டம் எதுவெனச் சிந்திப்பார்கள். ஒருசிலர் தங்கள் பொருளாதார நலனுக்காக, எதையும் செய்வார்கள். கேட்டால், தங்களின் நேர்மைபற்றி, தாங்களே வாதிட்டு, பிறருக்கும் அறிவுரை சொல்வார்கள்.

ஜனநாயகத்தின் பொருள் என்ன என்று தெரியாமல், அரசியலில் தங்கள் அனுபவங்களைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

மக்கள் இதுபற்றிக் கேள்வி எழுப்பாமல், அடுத்த தேர்தலிலும் அதே தவறுகளையே செய்வார்கள். நாட்டின் நலன் பற்றி, ஆழமான அறிவை மக்களும் வளர்க்கத் தயாரில்லை.

எதிர்காலத்தில் நாட்டின் நலன் எதுவெனப் புரியாதுவிடின், நட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் முகம்கொடுப்பது யார்?

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

ஐரோப்பிய மின்சார நெருக்கடி:

# இலங்கைக்கான படிப்பினைகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கை மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு, முக்கிய பங்களித்தவற்றில் ஒன்று மின்சார நெருக்கடி. இலங்கையின் மின்சார நெருக்கடிக்கு, தற்காலிகமான தீர்வு எட்டப்பட்டுள்ள போதும், இது நிரந்தரமானதோ நீண்டகாலத்துக்கு நிலைக்கக்கூடியதோ அல்ல; எப்போது வேண்டுமானாலும் இன்னொரு மின்சார நெருக்கடி ஏற்படக்கூடும் எனும் நிலையிலேயே, நாடு இயங்குகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒரு சரணாகதிப் பொருளாதார மாதிரியை நோக்கியே, இலங்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. தனியார் மயமாக்கலை உந்தித் தள்ளுகின்ற நவதாராளவாத பொருளாதார அடிப்படைகள் குறிவைக்கின்ற துறைகளில், மின்சாரம் முதன்மையானது.

தொழில்நுட்பம் சார்ந்த தேவைகளின் பெருக்கம், அன்றாட வாழ்வில் அதிகரித்துள்ள மின்சாரப் பாவனை, பொருளாதார வளர்ச்சி கோருகின்ற மின்சாரத்தின் தேவை என்பன, நாட்டின் பொருளாதாரத்தோடு மின்சாரத்தைப் பின்னிப் பிணைந்ததாக மாற்றியுள்ளன.

இலங்கையில் இப்போது அதிகரித்துள்ள இன்னும் அதிகரிக்கும் மின்சாரத் தேவையானது, மின்சாரத்தை மிகைஇலாபம் உழைக்கக்கூடிய ஒரு சரக்காக (commodity) மாற்றியுள்ளது. இதைச் சந்தைப் பொருளாதாரமும் அதன் அரங்காடிகளும் நன்கறிவர்.

மின்சாரத்தைத் தனியார் மயமாக்குவது, மின்சாரத்துக்கான மானியங்களை நிறுத்துவது, போட்டிச் சந்தையின் பகுதியாக மின்சாரத்தை மாற்றுவது போன்றன, இப்போது பிரதான பேசுபொருளாகி உள்ளன. இன்று உலகளாவிய ரீதியில், மின்சார நெருக்கடி நிலவுகின்றது. மின்சாரத்தை மக்களின் தேவைக்கு உரியதாகவன்றி, சரக்காக மாற்றியதன் விளைவை ஐரோப்பியர்கள் இன்று அனுபவிக்க நேர்ந்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், ஐரோப்பாவில் மின்சாரத்தின் விலை வானளவு மோசமாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டுகளை விட, நான்கு மடங்காகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 10 மடங்காகவும் இது உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில், எரிவாயுவின் விலை அதிகரிப்பு, போதுமான எரிவாயுவை ரஷ்யா வழங்காதது போன்ற காரணங்களால், இந்த விலையுயர்வு ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது. இது, முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. இரண்டு உதாரணங்களின் ஊடு, இதை நாம் நோக்கவியலும்.

ஜேர்மனியின் மின்சார உற்பத்தியில் ஏழில் ஒரு பங்கை மட்டுமே, இயற்கை எரிவாயு பங்களிக்கும் போது, ஜேர்மனியின் மின்சார விலை ஏன் நான்கு மடங்கு உயர வேண்டும்?

பிரித்தானியா புதுப்பிக்கத்தக்க மற்றும் அணுமின் நிலையங்களில் இருந்து, 40 சதவீத மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. தான் பயன்படுத்தும் இயற்கை எரிவாயுவில் இருந்து, பாதியை உற்பத்தி செய்கிறது. இங்கிலாந்து, மின்சாரத்தின் விலையில் கடுமையான உயர்வை ஏன் காண்கிறது?

எரிவாயு விலையில் சமீபத்திய அதிகரிப்புக்கு, ரஷ்யாவைக் குற்றம் சாட்டுவது பற்றிய இந்தப் பேச்சுகள் அனைத்தும், மின்சார உற்பத்தியாளர்கள் உண்மையில் மிக அதிகளவான இலாபத்தை ஈட்டுகிறார்கள் என்ற யதார்த்தத்தை மறைக்கிறது.

ஏற்கெனவே, கொரோனா வைரஸ் தொற்றால், மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட ஏழை நுகர்வோர், மிகக் கொடூரமான இக்கட்டான நிலையை எதிர்கொள்கிறார்கள். குளிர்காலத்தில், தங்கள் வீட்டு பட்ஜட்டில் 30-50 சதவிகிதம் மின்சார கட்டணமாக இருக்கும் என்பதால், அவர்கள் உணவை வாங்குவதா அல்லது தங்கள் வீட்டை சூடாக வைத்திருப்பதா என்ற முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மின்சாரத் துறையில், கடந்த 30 ஆண்டுகளாக நிகழ்ந்த சந்தைச் சீர்திருத்தங்கள் என்று சொல்லப்படும் கதையின் மறுபக்கமே, இப்போது ஐரோப்பா எதிர்நோக்குகின்ற மின்சார விலை உயர்வின் அடிப்படை ஆகும்.

தினசரி மற்றும் மணிநேர ஏலங்களில் மின்கட்டணமானது, விலையுயர்ந்த விநியோகத்திற்குரிய மின்சாரத்தின் விலையுடன் சமப்படுத்தப்படுகிறது. எனவே, மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனங்கள், குறைவான விலைக்கு மின்சாரத்தைப் பெற்றாலும், விநியோகத்தில் அதியுயர்ந்த விலைக்குள்ள மின்சார விலையையே வாடிக்கையாளருக்கு வழங்குகிறார்கள்.

இப்போது, அதியுயர்ந்த மின்சார விலையை நிர்ணயிப்பதாக இயற்கை எரிவாயு இருக்கிறது. மின்கட்டணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான முக்கிய ஆதாரமாக எரிவாயு இல்லாவிட்டாலும், சந்தையில் அதிகரித்துள்ள எரிவாயுவின் விலையின் காரணமாக, மின்சார விலை தொடர்ச்சியாக கடுமையாக உயர்ந்து வருகிறது. இது சந்தை அடிப்படைவாதம் என்று அழைக்கப்படுகிறது. இதை நவதாராளவாதப் பொருளாதார வல்லுநர்கள், 'விளிம்புப் பயன்பாட்டுக் கோட்பாடு' (*marginal utility theory*) என்று அழைக்கின்றனர்.

இது, 1973 முதல் 1990 வரை அகஸ்டோ பினோஷேவின் இராணுவ சர்வாதிகாரத்தின் போது, சிலியில் அறிமுகப்படுத்தப்பட்ட மின்சாரத்துறைச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகும். இந்த 'பினோஷே' சீர்திருத்தங்களின் மூலாதாரம், மில்டன் ப்ரீட்மன் ஆவார். ப்ரீட்மனும் அவரது பொருளாதார அடியாட்களும் எவ்வாறு சிலியைச் சுரண்டிக் கொழுத்தார்கள் என்பது தனிக்கதை. (இக்கதை இலங்கையுடன் பல வகைகளில் ஒத்தது).

சிலியில், 1980ஆம் ஆண்டு பினோஷேயின் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக, மின்சார விலை அதன் 'சிறிதளவு விலையை' (*marginal price*) அடிப்படையாகக் கொண்டது. சிலியின் இச்சீர்திருத்தங்கள் நாட்டின் மின்சாரத் துறையை தனியார் மயமாக்க வழிவகுத்தது. காலப்போக்கில், சாதாரணமான எளிய சிலி மக்களுக்கு, மின்சாரம் பெறுவது அரியதொன்றாகியது.

சிலியின் மாதிரியை மார்கரெட் தட்சர், பிரித்தானியாவுக்காக நகலெடுத்தார். பின்னர், அதை ஐரோப்பிய ஒன்றியம் நகலெடுத்தது. பிரித்தானியா, அதன் மத்திய மின்சார உற்பத்தி சபையை அகற்றியது. அச்சபையே அதுவரை நாட்டின் உற்பத்தி, பரிமாற்றம், மொத்த விநியோகம் என முழு மின்சார உட்கட்டமைப்பை இயக்கியது. இச்சபை அகற்றப்பட்டமையினூடு மின்சாரத்தின் முழுமையான கட்டுப்பாடு தனியாரின் கைகளுக்குச் சென்றது.

ஐரோப்பிய ஒன்றியம், அதன் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்க அதன் விருப்பமான எரிபொருளாக இயற்கை எரிவாயுவை பெரிதும் பயன்படுத்தியது. இது புதுப்பிக்கத்தக்க சக்தியை (சூரியகலம் மற்றும் காற்றாலை) மேலும் அதிகரித்து, கரியமில வாயுக்களை உமிழும் லிக்னைட் மற்றும் நிலக்கரியின் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைத்தது.

இயற்கை எரிவாயுவே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பலவற்றின் பிரதானமான சக்தி மூலமாகும். இந்நிலையிலேயே, ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யா மீது தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகளை விதித்தது. மேலும், ஐரோப்பிய ஒன்றிய வங்கிகளில் இருந்த ரஷ்யாவின் கையிருப்பான சுமார் 300 பில்லியன் யூரோக்களை கைப்பற்றியது.

ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தை குறைப்பதாக எதிர்வினையாற்றியது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கான எரிவாயு விநியோகத்தை, ரஷ்யா கடுமையாகக் குறைத்ததில் ஆச்சரியமில்லை.

மேற்குலகம் தனது நிதி சக்தியை ஆயுதமாக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தால், ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எரிவாயு விநியோகத்தை நிறுத்துவதன் மூலம், பதிலடி கொடுக்காது என்று எவ்வாறு நினைக்க முடியும்?

மேற்கு ஐரோப்பாவுக்கான ரஷ்யாவின் இயற்கை எரிவாயு விநியோகம் வீழ்ச்சியடைந்ததால், சர்வதேச சந்தையில் திரவப் பெற்றோலிய வாயுவின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இன்றைய நிலையில், ரஷ்யா தவிர்த்து பிறநாடுகளிடம் வாங்குவதற்குப் போதுமானளவு திரவப் பெற்றோலிய வாயு யாரிடமும் இல்லை. ரஷ்யா சர்வதேச சந்தையில் வழங்கிவந்த இயற்கை எரிவாயுவுக்கு மாற்றேதுமில்லை.

கடந்த சில மாதங்களில் எரிவாயு விலை, நான்கிலிருந்து ஆறு மடங்கு உயர்ந்துள்ள நிலையில், மின்சாரத்தின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

ஆனால், மின்சாரத்தின் ஒரு பகுதியே எரிவாயு மூலம் இயக்கப்படுகிறது என்ற உண்மை மறைக்கப்பட்டு, நுகர்வோர் மீது அதிக மின்சார விலையின் சுமையை அரசுகளின் ஆதரவுடன் தனியார் மின்சார நிறுவனங்கள் சுமத்தியுள்ளன.

இதனால், ஐரோப்பிய நாடுகளில் நுகர்வோர் மட்டும் மோசமாக பாதிக்கப்படவில்லை. தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வேலையிழப்புகள், பொருளாதார நட்டங்கள் என இந்நெருக்கடி பல்பரிமாணம் உடையதாய் மாறியுள்ளது.

முன்னாள் கிரேக்க நிதியமைச்சர் யானிஸ் வரூஃபாகிஸ், 'மின்சாரச் சந்தைகளை அழித்தொழிப்பதற்கான நேரம்' என்ற தனது கட்டுரையில் பின்வருமாறு எழுதுகிறார்:

'ஐரோப்பிய ஒன்றியத்தின் மின்சாரத்துறையின் சந்தை அடிப்படைவாதம், உலகெங்கிலும் உள்ள மின்சார விநியோகத்துக்கு என்ன செய்திருக்கிறது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம். சந்தைகள் மின்சார உற்பத்தியையும் விலையையும் விநியோகத்தையும் தீர்மானிப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இது' என்கின்றார்.

இலங்கை இதற்கு எதிர்த்திசையில் நகருகிறது. மின்சாரத்தின் முழுமையான தனியார் மயமாக்கலை, சர்வதேச நாணய நிதியம் உட்படப் பலர் வேண்டி நிற்கிறார்கள். இலங்கை மின்சார சபை, மிகுந்த கோளாறானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், மின்சாரத்தை முழுமையாகத் தனியாரின் கரங்களில் கொடுப்பதன் ஆபத்தை, இப்போதை ஐரோப்பிய மின்சார நெருக்கடி தெளிவாகக் காட்டியுள்ளது. இதிலிருந்து கற்பதா இல்லையா என்ற தெரிவு எம்முடையது.

## கடிதங்கள்

### ரயில்வே திணைக்கள இணையத்தளத்தை புதுப்பிக்கவும்

ரயில்வே திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம், கடந்த ஐந்து வருடங்களாக புதுப்பிக்கப்படாமையால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

தற்போதைய தலைமுறையினர், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தமது வாழ்க்கையை எளிதாகவும் திறமையானதாகவும் மாற்றிக்கொள்கின்றார்கள். அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலேயே பொதுத் துறைகளும் தம்மை நவீனமயப்படுத்தி, தக்கசேவையை வழங்க வேண்டும்.

150 வருடங்கள் பழைமை மிக்க ரயில்வே திணைக்களம், தற்போதைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் பின்னிற்கக் கூடாது. குறிப்பாக, பயணிகள் சேவைகள் என்ற பக்கத்தில், ஆசன ஒதுக்கல் தொடர்பான விவரங்களும் ஆசன ஒதுக்கீட்டு முறைகளும் காணப்படுகின்றன. ஆனால், இந்தப் பக்கம் 2021 ஏப்ரல் 19 ஆம் திகதி புதுப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை வருடங்களில் ரயில் சேவைகளில் பலவித மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் இங்கு பதிவிடப்படவில்லை.

இதைவிட, ஏனைய சேவைகள் என்ற பக்கம் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏழாம் திகதியே இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, பயணிகளுக்கு அவர்களின் நலன் கருதிய, சிறந்ததும் திறமையானதுமான சேவையை வழங்குவதற்கு, இலங்கை ரயில்வே திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு, பாதிக்கப்படும் பயணிகள் சார்பில் கோரிக்கை முன்வைக்கின்றேன்.

குகதாசன். எல்

கேரளா

# பஸ் விபத்தில் மாணவர்கள் உட்பட 9 பேர் உயிரிழப்பு



கேரளாவில் இரு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாலக்காடு மாவட்டம், திருச்சூர் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் (05) அரச பஸ் மீது, பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ்ஸொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பின்பக்கத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 40 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 66 குழந்தைகளின் உயிரைப் பறித்த இருமல் மருந்து?



மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியாவில் 66 குழந்தைகள் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த உயிரிழப்புக்கு 'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரமற்ற 4 இருமல் மருந்துகளே காரணமாக இருக்கலாம்' என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும், நச்சுத்தன்மை கொண்ட இம் மருந்துகள் மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு வெளியிலும் விநியோகம் செய்யப்பட்டிருக்கலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'காம்பியாவில் 66க்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புக்கு, இம் மருந்துகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதையடுத்து, குறித்து தீவிர விசாரணைகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சை

## உயிரிழப்புகளில் பாகுபாடு காட்டப்படுகின்றது –அன்புமணி ராமதாஸ்


நிவாரணம் வழங்குவதில் பாகுபாடு காட்டப்படுவது நியாயமற்றது என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், அண்மையில் தஞ்சை கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி 6 பேர் உயிரிழந்தனர். இச்செய்தி மிகுந்த வேதனையளிக்கின்றது. அவர்களின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் அரசினால் இழப்பீடு அறிவிக்கப்பட்டிருப்பது சரியான நடவடிக்கையே.

இதே கொள்ளிடத்தில் கடந்த ஜூலை மாதம் மீன் பிடித்துக் கொண்டிருந்த மூவர் ஆற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தியிருந்தேன்.

எனினும், அவர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படவில்லை. இத் தவறுக்கு அதிகாரிகளின் அலட்சியம் காரணமா அல்லது வேறு காரணமா என்பது தெரியவில்லை.

நடந்த தவறை சரி செய்யும் வகையில் ஜூலை மாதம் இறந்த மூவரின் குடும்பத்திற்கும் தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.





மும்பை

## முகேஷ் அம்பானி குடும்பத்தினருக்கு கொலை மிரட்டல்

மும்பையில் உள்ள ரிலையன்ஸ் மருத்துவமனை மற்றும் முகேஷ் அம்பானி குடும்பத்தினருக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் (05) ரிலையன்ஸ் மருத்துவமனைக்கு அழைப்பினை ஏற்படுத்திய மர்ம நபர், முகேஷ் அம்பானியின் குடும்பத்துக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதுடன், அம் மருத்துவமனையையும் வெடி வைத்து தகர்க்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் மருத்துவமனையில் சோதனையில் ஈடுபட்டனர் எனவும், அங்கு பொலிஸார் பாதுகாப்பிற்காகக் குவிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், நேத்தா அம்பானி குடும்பத்தினரையும் கொல்லப்போவதாக மிரட்டல் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளை மும்பை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தெலுங்கானா

## 'ஆதிபுருஷ்' திரைப் படத்தைத் தடை செய்யக் கோரிக்கை




தெலுங்குத் திரையுலகின் முன்னணி நடிகரான பிரபாஸ், ராஜமவுலி இயக்கத்தில் வெளியான 'பாகுபலி' திரைப்படம் மூலம் மிகவும் பிரபலமானார்.

இவர் தற்போது, இயக்குநர் ஓம் ராவத் இயக்கத்தில் நடித்துள்ள திரைப் படம் 'ஆதிபுருஷ்'. இராமாயணத்தை மையமாக வைத்து, உருவாக்கப்பட்டுள்ள இப்படத்தில் ராமர் கதாபாத்திரத்தில் பிரபாஸ் நடித்துள்ளார்.

இப் படத்தின் போஸ்டர் மற்றும் டீசர்-டிரெய்லரை படக்குழு அண்மையில் வெளியிட்டது.

இந்நிலையில் இப்படத்தில் ராமர் மற்றும் அனுமனை தவறாக சித்திரித்துள்ளனர் எனவும் எனவே, இப்படத்தை வெளியிடக் கூடாது எனவும் அயோத்தி ராமர் கோவிலின் தலைமை குருவான சத்யேந்திர தாஸ் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தர பிரதேசம்

## மாணவியை பாலியல் பலாத்காரம் செய்து தூக்கில் தொங்க விட்ட இளைஞர்



உத்தரபிரதேசத்தில் 19 வயது கல்லூரி மாணவி ஒருவர், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று, குறித்த மாணவி தனது வீட்டில் தனியாக இருந்துள்ளார். இதைப் பயன்படுத்திய இளைஞர், அம்மாணவியைப் பலாத்காரம் செய்து, கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவியின் இளைய சகோதரி, பயிற்சி வகுப்பிலிருந்து வீடு திரும்பிய போது, ஜன்னல் வழியாக நடந்தவற்றைப் பார்த்து அதிர்ச்சியடைந்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார். பொலிஸார் சம்பவம் குறித்து தீவிரவிசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# SLT-MOBITEL இன் ஊழியர்களுக்காக பொழுதுபோக்கு நிலையம்

ஊழியர்களை ஊக்குவித்து, ஈடுபாட்டைப் பேணும் நோக்கத்துடன், SLT-MOBITEL, தனது பன்நோக்கு பொழுதுபோக்கு நிலையத்தை, கட்டான, பொத்தோடே பகுதியில் அண்மையில் நிறுவியுள்ளது.

SLT-MOBITEL இன் உரிமையாண்மையின் கீழான பகுதியில் இந்தப் பொழுதுபோக்கு நிலையம் அமைந்துள்ளது. இரண்டு ஏக்கர் பகுதியில் அதிகாரிகளுக்கான தங்குமிட பகுதி மற்றும் 40 பேர்ச் பகுதியில் பரந்த விளையாட்டு மைதானம் ஆகிய இரு பகுதிகளை இந்த நிலையம் கொண்டுள்ளது. 1.75 ஏக்கர் பகுதியில் சிற்றூழியர்களுக்கான தங்குமிட வசதிகளையும் கொண்டுள்ளது. முன்னர் இந்தப் பகுதி, SLT அதிகாரிகளின் தங்குமிடமாக காணப்பட்டதுடன், தொற்றுப் பரவல் காலப்பகுதியில் ஊழியர்களுக்கான கொவிட் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையத்தின் அறிமுக நிகழ்வில் குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனிவிரட்ன, பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க (SLT), சந்திக விதாரன - பிரதம நிறைவேற்று அதிகாரி (மொபிடெல்) மற்றும் SLT-MOBITEL இன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தரம் வாய்ந்த பொழுது போக்கு அம்சங்கள், அனுபவங்கள் மற்றும் வசதிகளை பெற்றுக் கொடுத்து, சமூகமாக வளர்ச்சியை எய்தும் நோக்கில் SLT-MOBITEL, பன்நோக்கு பொழுதுபோக்கு நிலையத்தை ஊழியர்களுக்கு பரந்தளவு சேவைகளை உள்ளடக்கியதாக, எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

இந்த நிலையத்தை நிறுவியிருந்ததன் பிரதான நோக்கம், SLT-MOBITEL ஊழியர்களுக்கு பரந்தளவு வசதிகளை வழங்கி, தமது நலன்புரிச் செயற்பாடுகளை விஸ்தரிப்பதுடன், ஒரு சூழலில் வெளியக பயிற்சிகளை சௌகரியமாக முன்னெடுக்க வசதியளிப்பதாக அமைந்துள்ளது. இந்த நிலையம் வெளியக நிகழ்ச்சிகளையும் முன்னெடுக்கும். சொத்து கொள்ளளவை முழுமையாக எய்துவதை அடிப்படையாகக் கொண்ட SLT-MOBITEL இன் நோக்கத்தின் பிரகாரம் இந்த நிலையம் அமைந்திருக்கும். பயிற்சி தொழிற்பாட்டு செலவீனங்களைக் குறைத்து இல்லாமல் செய்வதனூடாக நீண்ட கால செலவுக்குறைப்பை ஏற்படுத்துவதுடன், வெளியக வளாகம் மற்றும் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதனூடாக மேலதிக வருமானமீட்டுவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. பாரிய காணிப் பகுதியினூடாக, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநருக்கு, சூழலுக்கு நட்பான செயன்முறைகளினூடாக நிலைபேறாண்மையை ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கும்.

நிலையத்துக்கான எதிர்கால வசதிகளில் விடுமுறை பங்களா, சகல வசதிகளும் படைத்த ஊழியர்களுக்கான பொழுது போக்கு நிலையம், SLT பயிற்சி நிலையத்தின் நிகழ்வுகளை முன்னெடுக்கும் ஆற்றல் மற்றும் உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு போட்டித் தொடர்களுக்கான களம் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

மொத்தத்தில், இந்த நிலையத்தினூடாக ஊழியர்களின் நலன்புரி, ஊக்குவிப்பு மற்றும் விருந்தினர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த அனுபவங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# செலான் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர

செலான் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக செலான் வங்கி அறிவித்துள்ளது. இந்த நியமனத்துக்கு முன்னதாக பிரதம செயற்பாட்டு அதிகாரியாக செயலாற்றியிருந்த ஜயசேகர, 2021 நவம்பர் மாதம் முதல் செலான் டிவலப்மன்ட்ஸ் பிஎல்சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் திகழ்கின்றார்.

2011 ஆம் ஆண்டு பிரதம நிதி அதிகாரியாக செலான் வங்கியில் இணைந்து கொண்ட ஜயசேகர, 2016 ஆம் ஆண்டில், பிரதம இடர் அதிகாரி எனும் பொறுப்பை ஏற்றதுடன், 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டாண்மை வங்கியியல் பிரதி பொது முகாமையாளராக பணியாற்றியிருந்தார். 2020 ஜனவரி மாதம், இவர் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக பதவி உயர்வு செய்யப்பட்டு, 2021 ஆம் ஆண்டில், பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் நிலைக்கு உயர்ந்திருந்தார்.



செலான் வங்கியுடன் இணைந்து கொள்ளும் முன்னதாக, பிரான்ஸ் வங்கியியல் முன்னோடியான BNP Paribas மத்திய கிழக்கு பிராந்தியத்தின் (பஹ்ரெய்ன், சவுதி அரேபியா, குவைட், கட்டார், துபாய், அபுதாபி, சைப்பிரஸ்) பிரதி பிராந்திய நிதிக் கட்டுப்பாட்டாளராக பஹ்ரெய்னிலிருந்து இயங்கியிருந்தார். இலங்கை HSBC இல் இவர் நிதி மற்றும் திட்டமிடல் வதிவிட முகாமையாளராகவும், KPMG ஸ்ரீ லங்காவில் கணக்காய்வு முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் வங்கியியல், தந்திரோபாயத் திட்டமிடல், நிதி முகாமைத்துவம், இடர் மற்றும் கணக்காய்வு போன்றவற்றில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவத்தை இவர் கொண்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியுமாவார். இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம், இலங்கை பட்டய சந்தைப்படுத்தல் கல்வியகம், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் ஆகியவற்றின் அங்கத்தவராகவும் ரமேஷ் ஜயசேகர திகழ்கின்றார்.

மினி மரதன் ஓட்டத்துக்கு

# வலுவூட்டுகிறது நெஸ்டமோல்ட்

அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக அகில இலங்கை பாடசாலைகள் மினி மரதன் போட்டியானது, கம்பஹாவில் ஒக்டோபர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வானது, சாதிக்க வேண்டும் என்ற அபிலாஷை கொண்ட விளையாட்டு வீரர்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் அவர்களின் வாழ்வில் விளையாட்டை முன்னெடுத்துச் செல்ல




சாதகமான தொடக்கத்தை வழங்குவதற்குமான தனது பயணத்தில், நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் இடம்பெறுகின்றது.

21 கிலோமீட்டர் மினி மரதன் மற்றும் 5 கிலோமீட்டர் ஓட்டத்தில் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் இருந்து முறையே 300 மற்றும் 1,200 க்கும் மேற்பட்ட வீரர்கள் அடங்கிய மாணவ,மாணவியர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஓர் அங்கமாகத் திகழ்ந்து வருகிறது. நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற அதன் தயாரிப்புக்களில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவை குருணாகலிலுள்ள அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, நெஸ்டமோல்ற்று 60 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் குடும்பங்களின் நம்பிக்கையை வென்று, அவர்களால் சுவைத்து மகிழப்பட்டு வருகின்றது. பிரத்தியேகமாக இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மிகவும் அபிமானம் பெற்ற மோல்ற்று அடங்கிய பானம் என்ற தனித்துவமான நாமத்துடன், மோல்ற்று அடங்கிய பார்லி மற்றும் பாலின் நலச்செழுமைகளை வழங்கி வருகிறது, உடலையும் மனதையும் உற்சாகப்படுத்த தேவையான ஊட்டச்சத்துக்களால் இது செறிவூட்டப்பட்டுள்ளது.

சம்பியன்ஸ் லீக்:

# சமநிலையில் பரிஸ் ஸா ஜெர்மைன் - பெய்பிக்கா

சம்பியன்ஸ் லீக் தொடரில், போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சமப்படுத்தியிருந்தது.



பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனல் மெஸ்ஸி பெற்றதோடு, பெய்பிக்கா சார்பாகப் பெறப்பட்ட கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி வென்றிருந்தது. செல்சி சார்பாக, வெஸ்லி பொபனா, பியர்-எம்ரிக் உபமெயாங்க், றீஸ் ஜேம்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## நான்காமிடத்தில் துடுப்பெடுத்தாடவுள்ள ஷகிப்?

அணியின் தேவைகள் கருதி, தனது விருப்பத்துக்குரிய மூன்றாமிட துடுப்பாட்ட நிலையைக் கைவிட பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத்துக்கு முன்பாக பாகிஸ்தான், நியூசிலாந்து பங்கேற்கும் தொடரொன்றே பங்களாதேஷுக்கு இருக்கின்ற நிலையில் இதுவரையிலும் நிலையான துடுப்பாட்டவரிசையை அவ்வணி இறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

லிட்டன் தாஸ், தனது ஆரம்பத்துடுப்பாட்டவீரர் நிலைக்கே சென்றால், சௌமியார் சர்க்கார் அல்லது நஸ்முல் ஹொஸைன் மூன்றாமிடத்தில் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை வென்ற அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியை அவுஸ்திரேலியா வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கர்ராராவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.



அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், ஆரம்பத்திலிருந்தே ஜொஷ் ஹேசில்வூட் (3), பற் கமின்ஸ் (2), மிற்செல் ஸ்டார்க் (2), கமரொன் கிறீனிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், கைல் மேயர்ஸ் 39 (36), ஒடியன் ஸ்மித் 27 (17) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 146 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியாவும் ஷெல்டன் கோட்ரல் (2), அல்ஸாரி ஜோசப் (2), யனிக் கரியாஹ், ஜேசன் ஹோல்டர், ஒடியன் ஸ்மித்திடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தபோதும் பின்ஞ்சின் 58 (53), மத்தியூ வேட்டின் ஆட்டமிழக்காத 39 (29) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பின்ஞ் தெரிவானார்.

இர்ரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது, பிறிஸ்பேணில் இன்று பிற்பகல் 1.40 மணிக்கு நடைபெறவுள்ளது.

லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடர்:

## சம்பியனானது இந்தியா கப்பிட்டல்ஸ்

லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் இந்தியா கப்பிட்டல்ஸ் சம்பியனானது.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பில்வாரா கிங்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே கப்பிட்டல்ஸ் சம்பியனானது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கிங்ஸ்

கப்பிட்டல்ஸ்: 211/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொஸ் டெய்லர் 82 (41), மிற்செல் ஜோன்சன் 62 (35), அஷ்லி நேர்ஸ் ஆ.இ 42 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: ராகுல் ஷர்மா 4/30 [4], மொன்டி பனேசர் 2/13 [3], டிம் பிறஸ்னன் 1/11 [2])

கிங்ஸ்: 107/10 (18.2 ஓவ. ) (பந்துவீச்சு: பங்கஜ் சிங் 2/14 [3], பிரவீன் தாம்பே 2/19 [4], பவான் சுயல் 2/27 [4], ரஜாட் பட்டியா - [1.2], லியாம் பிளங்கெட் 1/15 [3], மிற்செல் ஜோன்சன் 1/26 [3])

போட்டியின் நாயகன்: றொஸ் டெய்லர்

தொடரின் நாயகன்: யூசுஃப் பதான்




குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் துப்பாக்கிச்சூடு:

# 22 குழந்தைகள் துடித்துடித்து மரணம்

தாய்லாந்தில், குழந்தைகள் பராமரிப்பு மையமொன்றுக்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர், அங்கிருந்தவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 22 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் (06) இடம்பெற்ற இக் கொடூர சம்பவத்தில் பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணையில், குறித்த மர்ம நபர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என்பதும், அவர் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனவும், தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இக் கொடூர சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளியை உடனடியாகக் கைது செய்யுமாறு தாய்லாந்து பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.




## சிறைக் கைதிகளிடையே மோதல் – 16 பேர் பலி; 43 பேர் காயம்

தென் அமெரிக்க நாடான ஈக்வடோரில் உள்ள லடாகுங்கா சிறையில் ஒக்டோபர் 04 ஆம் திகதி சிறையில் கைதிகளிடையே ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

இம்மோதலின் போது சிறைக்கைதிகள் துப்பாக்கி, கத்தி போன்ற ஆயுதங்களைக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.

அத்துடன் இம்மோதலில் 16 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 43 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளம்

## சிறுமி மீது பாலியல் பலாத்காரம்; பிரபல கிரிக்கெட் வீரர் கைது

நேபாள கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்த சந்தீப் லாமிச்சானே, சிறுமியொருவரைப் பலாத்காரம் செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.




சந்தீப் லமிச்சனே இதுவரை 30 சர்வதேச ஒரு நாள் மற்றும் 44 T20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அத்துடன் இவர், ஐ.பி. எல் தொடரில் பங்கேற்ற முதல் நேபாள வீரர் என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், இவர் 17 வயதுடைய சிறுமியொருவரைப் பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் நேற்றைய தினம் (06) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து அச்சிறுமி தெரிவித்த புகாரில், “ஒரு நபரின் மூலமாக சந்தீப்பை சந்திக்க அனுமதி கிடைத்தது. அதன்பின்னர் ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி காத்மாண்டு ஹோட்டலுக்கு என்னை அழைத்து, அறையில் வைத்து பாலியல் தொந்தரவு செய்தார்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அச்சிறுமி பலாத்காரம் செய்யப்பட்டாரா? என்பது குறித்து மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் சந்தீப் லாமிச்சானேவைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் சந்தீப் லமிச்சனே “என் மீது சுமத்தப்பட்ட பாலியல் பலாத்காரப் புகார் மிகுந்த மன வேதனையளிக்கின்றது. நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க சட்டப் போராட்டம் நடத்துவேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## இரசாயனவியலுக்கான நோபல் பரிசு மூவருக்கு பகிர்ந்தளிப்பு



2022 ஆம் ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசானது அமெரிக்காவின் பேரி ஷார்ப்லஸ், கரோலின் பெர்டோசி, டென்மார்க்கின் மார்டென் மெல்டால் ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூலக்கூறுகளை ஒன்றிணைத்து பொருட்களை உருவாக்குதல் மற்றும் உயிரியல்பு இரசாயனவியல் வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிக்காக இம் மூவருக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானி பேரி ஷார்ப்லஸ் கடந்த 2001 ஆம் ஆண்டு இரசாயனவியலுக்கான நோபல் பரிசை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.




## நாடாளுமன்றக் கூட்டத்தில் தலைமுடியை வெட்டியெறிந்த எம்பி

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம், பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்காக பெண்கள் ஹிஜாபைக் கழற்றி எறிந்தும் அதனை தீயிட்டு எரித்தும், தலைமுடியை வெட்டியும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும், ஈரானில் ஆண், பெண் ஆகிய இருதரப்பினருக்கும் எதிரான அடக்குமுறைகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் சுவீடனைச் சேர்ந்த ஐரோப்பிய யூனியன் எம்பி. அபிர் அல் சாஹியானி, நாடாளுமன்றக் கூட்டத்தின் போது தனது தலைமுடியை வெட்டி வீசி எறிந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 07 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.